DEPOSITION OF WITNESS
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )
**O.S.No.42/2013**

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | : | DW 1 |
| Name | : | அன்னத்தாய் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | 18.09.2024 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 18th September 2024

**முதல்விசாரணை**

நான் இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி ஆவேன். நான் இன்று இந்த வழக்கில் எனக்காகவும், 2ம் பிரதிவாதிக்காகவும் சேர்த்து எனது சத்தியபிரமாண நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். மேற்படி வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் நான் கையொப்பம் செய்திருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை எனது முதல் தரப்பு விசாரணையாக ஏற்றுக்கொள்ள பிரார்த்திக்கிறேன்.

1. 23.08.1950 தேதியிட்ட கருப்பசாமி தேவர் பெயரில் உள்ள பதிவு கிரைய ஆவணம் சார்பதிவாளர் நகல் தாக்கல் செய்கிறேன். **அது பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**2.** 15.06.1953 தேதியிட்ட கருப்பசாமிதேவர் பெயரில் உள்ள பதிவு கிரைய ஆவணம் சார்பதிவாளர் நகல் தாக்கல் செய்கிறேன். **அது பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**3.** கருப்பசாமிதேவர் புல எண்.862/2ல் புதிய கிணறு அமைக்கும் வகைக்கு பிராது தபசில் சொத்தினை அடமானம் வைத்த பதிவு அடமான ஆவண எண்.136/1966 ன்

சார்வதிவாளர் நகல் தாக்கல் செய்கிறேன். **அது பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**4.** வாதியும், வாதியின் வகையறாக்களும் கண்ணையாதேவர் என்பவருக்கு கிரையம் கொடுத்த கிரைய ஆவணம் சார்பதிவாளர் நகல் தாக்கல் செய்கிறேன். **அது பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**5.** 16.08.2012 தேதியிட்ட பிராது தபசில் சொத்துக்களை பொறுத்து ஏற்படுத்திக்கொடுத்த பதிவு ஏற்பாடு ஆவணம் சார்பதிவாளர் நகல் தாக்கல் செய்கிறேன். **அது பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**3,4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

**வாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**